# கலேவல பிரதேச சபை
# மாத்தளை மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 ஏப்ரல் 08 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 ஆகஸ்ட் 08 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது அறிக்கையில் காணப்படும் கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள கலேவல பிரதேச சபையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) நிலையான சொத்துக்கள் மற்றும் மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்புக் கணக்கு மீதி என்பன ஒன்றுக்கொன்று சமமாக இருக்க வேண்டிய போதிலும் அந்தக் கணக்கு மீதிகளுக்கிடையே ரூபா 2,306,909 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஆ) சபைக்குச் சொந்தமான புதிய வியாபாரத் தொகுதி மற்றும் வாராந்த கடைகள் நிர்மாணிப்பதற்காக மீளாய்வாண்டில் செலவிடப்பட்ட ரூபா 3,892,263 தொகையான செலவினம் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ரூபா 500,000 பெறுமதியான பழைய பிரதேச சபைக் கட்டிடம் மற்றும் பழைய நூலகக் கட்டிடம் என்பன உடைத்து அகற்றப்பட்டிருந்த போதிலும் அதன் பெறுமதி கணக்குகளிலிருந்து அகற்றப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ஆண்டின் போது கொள்வனவு செய்யப்படுகின்ற பொருள் இருப்புக்கள் கொள்வனவு செய்யப்படுகின்ற சந்தர்ப்பங்களில் செலவினத் தலைப்புக்களில் வரவு வைத்து ஆண்டின் இறுதியில் கொள்வனவு செய்யப்பட்ட இருப்பு உரிய செலவினத் தலைப்பில் செலவு வைக்கப்பட்டு கையிலுள்ள இருப்பு கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது. பின்னர் களஞ்சியத்திலிருந்து வழங்கப்பட்ட ஆண்டிற்குரிய இருப்பின் பெறுமதி செலவினத் தலைப்பில் வரவு வைக்கப்பட்டு கையிலுள்ள இருப்பு கணக்கில் செலவு வைக்கும் முறைமை பின்பற்றப்பட்டிருந்தது. அதன் காரணமாக இருப்புக் கணக்கு வைத்தல் சாத்தியமான முறைமைக்குப் புறம்பானதாக இருந்தது.

(உ) சபைக்குச் சொந்தமான 17 காணிக்கூறுகள் மற்றும் 07 கட்டிடங்களின் பெறுமதி முறையே ரூபா 68,946,000 மற்றும் ரூபா 136,200,000 தொகைகள் கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஊ) பற்றுச்சீட்டிடப்பட்ட வருமானம், வருமானக் கடன்பட்டோரில் வரவு வைத்து வருமானக் கட்டுப்பாட்டுக் கணக்கிற்கு செலவு வைத்தல் மற்றும் காசுப் பெறுவனவுகளின் போது பணத்தை வரவு வைத்து உரிய கடன்பட்டோரில் செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் ஆதனவரி ஏக்கர் வரி, நீர்க்கட்டணம் மற்றும் கடை வாடகை என்பவைகளுக்காக சேகரிக்கப்படுகின்ற வருமானங்கள் ஒவ்வொரு வருமானத்தினதும் காசு வரவு வைக்கப்பட்டு வருமானக் கணக்கில் செலவு வைக்கப்பட்டதன் பின்னர் வருமானக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு நிலுவையாக இருந்த வருமானக் கணக்கில் செலவு வைத்தல் மற்றும் பற்றுச்சீட்டிடப்பட்ட வருமான அளவிலிருந்து நிலுவையாக இருந்த வருமானக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு ஒவ்வொரு வருமானக் கட்டுப்பாட்டுக் கணக்கிலும் செலவு வைக்கும் முறைமையொன்று பின்பற்றப்பட்டிருந்தது.

(எ) 05 கணக்கு விடயங்களுக்குரிய கட்டுப்பாட்டுக் கணக்கின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத் தொகை, உபயோகப் பதிவேடுகள் மற்றும் அறிக்கையின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகைக்கிடையே ரூபா 5,066,191 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 67,941,045 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

முடியாதிருந்ததுடன் அவ்வாறான சந்தர்ப்பங்களின் போது சொத்துக்களை பிரதேச சபைக்கு கையளிக்க வேண்டியிருந்தமை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த பிரமாணங்களுக்கு முரணாக 40 கடைகள் வாடகையாளரினால் பல்வேறு தரப்பினர்களுக்கு உப வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(உ) ஒவ்வொரு வியாபாரத் தொகுதிகளிலும் கடைகளுக்கான வாடகை ரூபா 500 தொடக்கம் ரூபா 2,700 இற்கிடையிலான தொகையில் மதிப்பீடு செய்யப்பட்டு வாடகையாளருடன் உடன்படிக்கைகளில் கைச்சாத்திடப்பட்டு வாடகைக்குப் பெற்ற தரப்பினருடன் சபை வாடகை அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும் அந்த வாடகைக்குப் பெற்ற தரப்பினர்கள் மேற்கூறப்பட்ட கடைகளை ரூபா 3,500 தொடக்கம் ரூபா 15,000 இற்கிடையிலான தொகையில் ஏனைய தரப்பினர்களுக்கு வாடகைக்கு வழங்கியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 2.3.4 அனுமதிப் பத்திரக் கட்டணம்

(அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் இலக்கம் 152(4) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு செய்யப்படாமையினால் பலவருட காலமாக தொடர்ச்சியாக முன்கொண்டு வரப்படுகின்ற ரூபா 691,370 தொகையான நிலுவை வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாகம்) விதிக்கோவையின் 67 ஆம் விதியின் பிரகாரம் வருடாந்தம் நிர்மாணங்கள் தொடர்பான மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட வேண்டியிருந்ததுடன் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 152 ஆம் பிரிவின் பிரகாரம் நிர்மாணங்கள் தொடர்பான பட்டியலொன்று தயாரிக்கப்பட்டு வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் மெய்மையாய்வு மேற்கொள்ளப்படாமல் வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடப்பட்டிருந்தது.

### 2.3.5 ஏனைய வருமானம்

கலேவல பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள இலங்கை சுற்றுலா மேம்பாட்டு அதிகார சபையில் பதிவு செய்துள்ள ஹோட்டலில் இருந்து 1987 இன் 15

உத்தியோகத்தர்களுக்கு மீளாய்வாண்டின் போது ரூபா 17,541 செலவில் சீருடை வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 19(1) ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணாக உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரமின்றி 28 ஊழியர்கள் நாட்சம்பள அடிப்படையில் சேர்க்கப்பட்டு மீளாய்வாண்டின் போது சபை நிதியத்திலிருந்து ரூபா 4,141,176 தொகையான சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது.

## 2.7 ஒப்பந்த நிருவாகம்

பல்வேறு நிதியேற்பாடுகள் மற்றும் மானியங்களின் கீழ் நிறைவேற்றப்பட்ட 05 வீதி நிர்மாணங்களுக்காக ரூபா 2,297,578 கூட்டுத்தொகையான செலவினம் எற்பட்டிருந்தது. இந்த நிர்மாணங்கள் குறிப்பிட்ட நிமயங்களின் பிரகாரம் மேற்கொள்ளப்படாதிருந்தமை உரிய நிர்மாணங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | நிர்மாண விடயம் | நிதியேற்பாடு / மானியம் | செலவிடப்பட்ட தொகை |
|---|---|---|---|
| | | | ரூபா |
| (i) | இப்பன்கட்டுவ ஜன உதானகம சுற்றுவட்ட வீதிக்கு கொங்கிரீட் சிறு கற்கள் பதித்தல் | மாகாண சபை நிதியேற்பாடு - 2012 | 130,569 |
| (ii) | தென்னகோன்புர பன்சல வீதிக்கு கொங்கிரீட் சிறு கற்கள் பதித்தல் | கமநெகும நிதியேற்பாடு - 2012 | 1,063,718 |
| (iii) | ரங்கிரிகொல்ல வீதிக்கு கொங்கிரீட் இடல் | மாகாண குறித்த அபிவிருத்தி மானியம் 2012 | 428,227 |
| (iv) | எதாபெந்திவெவ வீதியில் கிரவல் மலை வீதியை அபிவிருத்தி செய்தல் | மாகாண குறித்த அபிவிருத்தி மானியம் 2012 | 170,000 |
| (v) | புவக்பிட்டிய கம்மெத வீதியை அபிவிருத்தி செய்தல் | கமநெகும அபிவிருத்தி மானியம் 2012 | 505,064 |
| | | | 2,297,578 |

திகதியான 2013 யூன் 06 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.9 கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

ஒன்றிணைந்த கழிவுப் பொருள் முகாமைத்துவ செயற்திட்டத்திற்காக சபைக்கு 2007 ஆம் ஆண்டு தொடக்கம் 2010 ஆம் ஆண்டு வரை மத்திய மகாண சபையின் கீழ் ரூபா 5,927,470 தொகையான நிதியேற்பாட்டின் அடிப்படையில் அரைக் குழி முறைமையின் மூலம் கழிவுப் பொருள் மீள் சுழற்சி செய்யப்படுகின்றது. இந்த முறைமையில் மழை நீர் வெளியில் வழிந்தோடும் கீழ்ப்பகுதியில் நிர்மாணிக்கப்பட்டமையினால் மழை நீர் தேங்கி நுளம்புகள் பெருகும் இடமாக உள்ளாக்கப்பட்டிருந்ததுடன் அகற்றப்படுகின்ற பொலீத்தீன் மற்றும் ஏனைய உக்காத கழிவுப் பொருட்கள் அருகில் குவிக்கப்பட்டிருந்தமை 2012 நவம்பர் 22 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட களப்பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

**3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டப்பாட்டுப் பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிருவாகம்
(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஈ) ஒப்பந்த நிருவாகம்
(உ) களஞ்சியக் கட்டுப்பாடு